பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 28 வியாழக்கிழமை 12.01.2023 கதிர் 318

## விபத்தில் முதியவர் பரிதாப உயிரிழப்பு

விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ். கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த ராமன் தர்மலிங்கம் (வயது-81) என்பவரே உயிரிழந்தவராவார். ☞ 8

## 2019 இல் உயிர்த்த ஞாயிறு தினமன்று

# தாக்குதலைத் தடுக்கத் தவறிய மைத்திரி 10 கோடி ரூபா இழப்பீடு வழங்கவேண்டும்

### ஹேமசிறி, பூஜித உள்ளிட்ட மேலும் நால்வருக்கு எதிராக உயர்நீதிமன்றம் இன்று அதிரடித் தீர்ப்பு





உளவுத் தகவல்கள் கிடைத்தும் 2019 ஏப்ரல் 21 – உயிர்த்த ஞாயிறு தினமன்று பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதன் ஊடாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ☞ 2




## தமிழக முதலமைச்சருக்கு 'யாழ்' வழங்கிய சுமந்திரன்

தமிழக அரசின் ஏற்பாட்டில் அயலகத் தமிழர் தின நிகழ்வு சென்னையில் நேற்றும் இன்றும் நடைபெற்றது.

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் ☞ 2

## உள்ளூராட்சி சபைத் தேர்தலின் ஊடாக தேசிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது

### – ஜே.வி.பியின் எம்.பி. விஜித ஹேரத் சுட்டிக்காட்டு



உள்ளூராட்சி சபைத் தேர்தலின் ஊடாக தேசிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது – என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

எமது ஆட்சியில் ஊழல், மோசடி இடம்பெறாது. ஊழல் வாதிகளுக்கு எமது ஆட்சியில் தண்டனை வழங்குவோம். இனி யாரும் ஊழல் புரிய முடியாதவாறு சட்டத்தை அமுல்படுத்துவோம்.

உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் ☞ 2

## தேர்தலை நடத்த சட்ட ரீதியாக எந்தவிதத் தடையும் இல்லை!

### ஆணைக்குழுவின் பணிப்பாளர் தெரிவிப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு சட்ட ரீதியாக எந்தத் தடையும் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் ☞ 8

## 'ஓட்டோ' சின்னத்தில் களமிறங்குகின்றது சிறிதுங்கவின் கட்சி




உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் களமிறங்குவதற்கு ஐக்கிய சோசலிசக் கட்சி திட்டமிட்டுள்ளது என்று அதன் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள சில சபைகளுக்கு எமது ☞ 8

## டிவகலாலா பிரிந்தார்



இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்தின் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளரும், சிறந்த கல்விமானுமான சுந்தரம் டிவகலாலா இன்று காலை யாழ்ப்பாணத்தில் தமது இல்லத்தில் காலமானார். அவருக்கு வயது 81. யாழ்ப்பாணம் ☞ 2

## வடக்கை குறிவைக்கும் கருணா, பிள்ளையான்



இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சில உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடவுள்ளது.

அந்தக் கட்சியின் சார்பில் ☞ 8

## மக்களின் அடிப்படை உரிமைகளை காலில் போட்டு மிதிக்கின்றது அரசு

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சரவையும் மக்களின் வாக்குரிமையில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். அவர்கள் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் 68 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் ஒன்று

கதிர்காமம் ஜனாதிபதி மத்திய கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நேற்று (11) அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே ☞ 8

## தாக்குதலை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ உள்ளிட்ட ஐவர் அடிப்படை மனித உரிமையை மீறியுள்ளனர் எனவும், இவர்கள் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

போதுமான உளவுத் தகவல்கள் இருந்தும் உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதன் ஊடாக, தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனத் தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டவர்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணைகளும் கடந்த 2022 ஒக்டோபர் 5 ஆம் திகதி நிறைவுக்கு கொண்டுவரப்பட்டன.

மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹார, எல்.டி.பி.தெஹிதெனிய, முர்து பெர்ணான்டோ, எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய ஏழுபேர் கொண்ட நீதியரசர்கள்குழாம்முன்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த மனுக்களின் தீர்ப்பு, இன்று வழங்கப்பட்டது.

இதன்படி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 10 கோடி ரூபாவையும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தலா 7 கோடி 50 இலட்சம் ரூபாவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 5 கோடி ரூபாவையும் , தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் ஒரு கோடி ரூபாவையும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 6 மாத காலத்துக்குள் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேற்படி இழப்பீட்டு தொகைகள் பெறப்பட்டு, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு 10 இலட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு 5 இலட்சம் ரூபாவும் இழப்பீடாகப் பகிரப்பட வேண்டும்.

உயிர்த்தஞாயிறுதினத்தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் தனது இரு பிள்ளைகளை இழந்த தந்தையான நந்தன சிறிமான்ன, சுற்றுலாத்துறை வர்த்தகர் ஜனக விதானகே, இரு கத்தோலிக்க மதகுருமார், ஸெங்ரில்லா ஹோட்டலில் குண்டுத் தாக்குதலில் சிக்கிய சட்டத்தரணி மோதித்த ஏக்கநாயக்க, கத்தோலிக்க மதத் தலைவர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட 12 தரப்பினரால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## தமிழக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், இலங்கை வாழ் தமிழ் மக்களின் நன்றி மறவா அன்பளிப்பாக தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு 'யாழ்' ஒன்றைப் பரிசாக வழங்கி வைத்தார்.

## உள்ளூராட்சி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம்.

புதிய அரசமைப்பை நாம் தயாரித்து வைத்துள்ளோம். அதை மக்கள் முன்னிலையில் சமர்ப்பிப்போம். சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

இப்போது இருக்கும் அரசமைப்பு மக்கள் ஏற்றுக்கொண்ட அரசமைப்பு அல்ல. இது ஜே.ஆர். அவரது ஆறில் ஐந்து அதிகாரத்தைப் பயன்படுத்தி அவருக்காக உருவாக்கப்பட்டது. மக்களுக்காக உருவாக்கப்பட்டது அல்ல.

1972இல் ஸ்ரீமா உருவாக்கிய அரசமைப்பும் இப்படியான ஒன்றுதான். அதுவும் மக்களின் அனுமதி பெறப்பட்ட ஒன்றல்ல.

நாம் கொண்டு வருகின்ற அரசமைப்புதான் மக்கள் அனுமதி தருகின்ற அரசமைப்பாக இருக்கும். அது சர்வஜன வாக்கெடுப்பின் மூலமே நிறைவேற்றப்படும். அப்படி நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே அது மக்கள் அனுமதி வழங்கிய அரசமைப்பாகும்.

மக்கள் இப்போது விரும்புவது புதிய ஆட்சியை. அதற்குத் தேவை நாடாளுமன்றத் தேர்தல். அதை அரசு அதை நடத்த

வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் ஊடாக தேசிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆனால், மக்களின் எதிர்ப்பை – எதிர்பார்ப்பை அந்தத் தேர்தலின் ஊடாக அரசுக்குத் தெரிவிக்க முடியும். அதனுடாக அரசு மக்களுக்குத் தீர்வை வழங்குவதற்குத் தள்ளப்படும்.

இந்த திருட்டு அரசுக்கு எமது ஆதரவை வழங்க முடியாது. நாம் ஆதரவு வழங்கினாலும் மக்களின் பிரச்சினைகளை இந்த அரசு தீர்க்காது. ஆகவே, ஒருபோதும் நாம் அரசுக்கு ஆதரவு வழங்கமாட்டோம். அதைவிட மக்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள். அவர்கள் புதிய அரசைத் தீர்மானிக்கட்டும்.

அந்தப் புதிய அரசின் ஊடாகத் தான் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் – என்றார்.

## டிவகலாலா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்து கல்லூரி, பேராதனை பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பழைய மாணவரான சுந்தரம் டிவகலாலா பலராலும் மதிக்கப்பட்ட சிறந்த ஆளுமையாளர்.

அரச சேவை ஓய்வின் பின்னர் 'ஆறுதல்' என்ற தொண்டு நிறுவனத்தை அமைத்து, முன்பள்ளித் துறையின் வளர்ச்சிக்காக முன்னோடியாக செயல்பட்டவர். அரச சேவைத் துறையில் சிறந்த நிர்வாகியாகவும், தலைமைத்துவ பண்புகள் நிறைந்த மனிதராகவும், முன்னோடி ஆற்றல் மிக்கவராகவும், ஆளுமையாளராகவும் அவர் மதிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் இந்து கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக நீண்ட காலம் இருந்தவர். சிறந்த மொழிப்பற்றாளர். தமிழரின் விடுதலைப் போராட்டத்தோடு தமது ஆளுமையை இணைத்துக் கொண்ட பண்புமிக்க மனிதராக அவர் பார்க்கப்பட்டார்.

அவர் வடக்கு – கிழக்கு மாகாணத்தின் கல்விச் செயலாளராக இருந்த போது யுத்தத்துக்கு மத்தியிலும் வடக்கு மாகா ணமும், கிழக்கு மாகாணமும் கல்விப் பெறுபேறுகளில் தேசிய மட்டத்தில் முதலாவதாகவும் இரண்டாவதாகவுமே தொடர்ந்து முன்னிலை வகித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அவரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை நடைபெறும். அன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம், 127, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாலை 4 மணிக்கு பூதவுடல் யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## நீதி இன்னமும் கிட்டவில்லை

2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதன் ஊடாகத் தவறிழைத்தனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்படப் பலருக்கு எதிரான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்று வெளியாகி உள்ளது.

பன்னிரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பில் உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 10 கோடி ரூபாவையும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தலா 7 கோடி 50 இலட்சம் ரூபாவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 5 கோடி ரூபாவையும் , தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் ஒரு கோடி ரூபாவையும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏழு நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் இத்தீர்ப்பை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் மிக உச்ச – மேனிலை– நீதிமன்றத் தீர்ப்பு இது என்பதால் இதற்கு எதிரான மேன்முறையீடு என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏதேனும் சட்டத் தொழில்நுட்பத் தவறுகள் இருப்பின் மீளாய்வுக்கு விண்ணப்பிக்க முடியும். ஆனால் அதுவும் ஏழு நீதியரசர் கொண்ட ஆயத்தின் தீர்ப்பு இது என்பதால் அதைத் தாண்டிய மீளாய்வுக்குப் பெரும்பாலும் இடமில்லை.

இந்தத் தீர்ப்பில் ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டும். இது தண்டனைத் தீர்ப்பல்ல. இழப்பீடு வழங்குவதற்கான தீர்ப்பேதான். பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கவதற்கான அம்சம் மட்டுமே.

ஆயினும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் தமக்கு நீதி செய்யப்பட வேண்டும் என்று கோரி வரும் – வலியுறுத்தி மன்றாடி நிற்கும் – பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு இந்தத் தீர்ப்பு திருப்தி தரப்போவதில்லை.

இப்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு பாதிப்பைத்தடுக்கதவறிய தரப்புகளுக்குஎதிரானது மட்டுமே.

மறைமுக நோக்கங்கள், இலக்குகளோடு தாக்குதல்களுக்குக் காரணமானவர்கள் என்று சந்தேகிக்கப்படும் சூத்திரதாரிகளுக்கு எதிராக இன்னும் சட்டவலை விரிக்கப்படக் கூட இல்லை என்பதுதான் பாதிக்கப்பட்ட தரப்புகளின் ஆதங்கம். அதில் நியாயமும் உண்டு.

# தமிழ்க் கட்சிகள் சேர்ந்திருந்து மக்களுக்கு என்ன செய்தார்கள்?

## அம்மான் படையணியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் கேள்வி




தமிழ்க் கட்சிகள் கடந்த 20 வருடமாக ஒன்றாக இருந்து தமிழ் மக்களுக்கு என்ன செய்தார்கள், தற்போது இவர்கள் பிரிந்துவிட்டால் எங்களுடைய வாழ்க்கை இழந்து போய்விட்டதாகப் பேசுகின்றார்கள். ஒன்றாக இருந்து தங்கள்தங்களுடையகுடும்பங்களையும், சொந்த பந்தங்களையும் வளர்த்ததைத்தவிர தமிழ் மக்களுக்கோ தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கோ என்ன நடைபெற்றுள்ளது என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் உப தலைவரும் அம்மான் படையணியின் தலைமை ஒருகிணைப்பாளருமான ஜெயா சரவணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியாவில் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துரைக்கையில் -

மாவீரர்தினம் வந்ததும் மண்வெட்டியைத் தூக்கி வைத்துக்கொண்டு வெளிநாடுகளிலிருந்து பணம் பெற்றுக் கொள்வதைத்தவிர வேறு என்னத்தை செய்தார்கள், இனியும் ஒன்றும் நடைபெறப்போவதில்லை பிரிந்து செல்வது நல்லது பிரிவதால் எமக்கு ஒரு கவலையும் இல்லை. அம்மான் படையணி என்பது சமூகச்சீரழிவுகளை தவிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட படையணி போதைவஸ்துக்கு எதிராக கடந்த மூன்று மாதங்களாக குரல் எழுப்பி பேராடி வருகின்றோம். எமது தலைவரிடமிருந்து அழைப்பு ஒன்று கிடைத்துள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுமாறு அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து கொண்டு வடமாகாணத்துக்கு தலை வரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளேன்.

எமது சிறார்களைக் காப்பாற்ற நாங்கள் எடுத்த நடவடிக்கையால் பல கிலோ போதைப் பொருள்களைக் கைப்பற்றி விசேட அதிரடிப்படையினிடம் ஒப்படைத்திருக்கின்றோம். வடபகுதியில் எமது இளைஞர்களால் பல கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றது. அதேபோல பாடசாலைகளில் எமது படையணியின் இளைஞர்களால் கைப்பற்றப்படும் போதைப்பொருள்கள் படையினரிடம் ஒப்படைத்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இளைஞர் யுவதிகளுக்கு விழிப்புணர்வு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றோம். இவை அனைத்தும் ஒரு மூன்று மாதகாலப்பகுதியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் செயற்பாடுகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்ளும்போது பல இளைஞர்கள் எங்களுடன் இணைந்து செயற்படுவதால் அதன் தாக்கம் வீச்சு அதிகமாக இருக்கும். எதிர்வரும் தேர்தலில் நாங்கள் போட்டியிடவுள்ளதால் இளைஞர்கள், யுவதிகள், முன்னாள் போராளிகள் எங்களுடன் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும்.

ஏனைய கட்சிகள் எங்களுக்கு அழைப்பு விட முடியாது. ஏனென்றால் நாங்கள் தனித்துவமாக போய்க் கொண்டு இருக்கின்றோம். அழைப்புக்கள் தலைமைக்கு வந்த வண்ணம் தான் உள்ளது. ஆனால் எங்களுடன் இணைந்து செயற்பட விரும்பினால் இலஞ்சம், ஊழல் தவிர்த்து வேலை செய்ய விரும்பினால் யாராக வேண்டுமானாலும் இணைந்து கொள்ளலாம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தந்திரம் மிக்கவுள்ள ஒருவர். 70 வருட பிரச்சினையை 4 ஆம் திகதிக்குள் தீர்வு தருவதாக அறிவித்துவிட்டார். பின்னர் தமிழ் கட்சிகள் அனைத்தும் சேர்ந்திருந்தால் தான் தீர்வைக்கொடுக்க முடியும் என்பதை அறிவிப்பார்கள். அதற்காகதமிழ்க்கட்சிகளைஉடைச்சாக்கு. முன்னர்புலியைஉடைத்தார். இப்போது கூட்டமைப்பை உடைத்தார் அவ்வளவே என மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற பொலிஸ் பிரிவின் எஸ்.எஸ்.பி. வெற்றிடத்துக்கு சிசிர பெத்ததந்திரி நியமனம்!

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர பெத்ததந்திரி நாடாளுமன்ற பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஞ்சுள செனரத் பதில் பிரதி பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்தே நாடாளுமன்ற பொலிஸ் பிரிவுக்கு பெத்ததந்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.


# பிள்ளைகளைப் பாடசாலையில் விட்டுவிட்டு திரும்பும்போது தந்தைமீது துப்பாக்கிச் சூடு!

எம்பிலியப்பிட்டியின் பனாமுரவில் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தனது இரு பிள்ளைகளையும் விட்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

50 வயதான ஒருவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் தங்காலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளநிலையில் பிரேதபரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

# நெருப்புடன் விளையாடாதீர்கள் என சீனா தைவானின் நட்பு நாடுகளுக்கு எச்சரிக்கை



பீஜிங், ஜன.12

தனது படைபலத்தை பயன்படுத்தி தைவானை சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர சீனா முயற்சித்து வரும் சூழலில் தைவானின் சுதந்திரத்தை ஆதரிக்கும் விதமாக அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் அண்மை காலமாக தைவானுடன் நட்புப் பாராட்டி வருகின்றன. நட்புறவை வலுப்படுத்தும் விதமாக அந்த நாடுகள் தங்களின் பிரதிநிதிகளை தைவானுக்கு அனுப்பி வருகின்றன. இது சீனாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது.

அந்த வகையில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகராக இருந்த நான்சி பெலோசி சீனாவின் எதிர்ப்பை மீறி தைவானுக்குச் சென்றார். இதனால் கோபம் அடைந்த சீனா தைவானைச் சுற்றி வளைத்து மிகப்பெரிய போர்ப்பயிற்சியை நடத்தியது. இந்தச் சூழலில் அமெரிக்காவைத் தொடர்ந்து பல நாடுகளின் பிரதிநிதிகளும் தைவானுக்குப் பயணம் செய்து வருகின்றனர்.

அந்த வகையில் ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி மற்றும் லூதியானா நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தற்போது தைவான் சென்றுள்ளது. இது குறித்து சீனாவின் தைவான் விவகார அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில் –

தைவான் விவகாரத்தில் தேசிய இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாப்பது மற்றும் தைவான் சுதந்திரத்திற்கான சதிகளை அடித்து நொறுக்குவதில் சீனா இப்போதும் உறுதியாக உள்ளது. சீனாவுக்கு தீங்கிழைக்க வேண்டும் என்கிற ஒரே எண்ணத்தில் சில நாடுகள் தைவானுக்கு ஆதரவாக செயல்படுகின்றன. அந்த நாடுகள் நெருப்புடன் விளையாடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என கூறியுள்ளார்.

## ஆப்கானில் ஆண் வைத்தியர்களிடம் சிகிச்சை பெற பெண்களுக்குத் தடை



காபூல், ஜன.12

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு அதிகாரத்தை கைப்பற்றிய தலீபான்கள் பெண்கள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என உறுதியளித்தனர். ஆனால் அதற்கு நேர்மாறாக பெண்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் வகையில் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர். கல்வி கற்கத் தடை, உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் கேளிக்கை பூங்காக்களுக்கு செல்லத் தடை, ஆண்கள் துணையின்றி பயணிக்கத் தடை, வேலைக்குச் செல்லத் தடை எனப் பல்வேறு கட்டுப்பாடுகளால் பெண்கள் நசுக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் எழுந்து வந்தாலும் தலீபான்கள் அதனை பொருட்படுத்துவதாக இல்லை.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானின் பால்க் மாகாணத்தில் ஆண் வைத்தியர்களிடம் சிகிச்சை பெறப் பெண்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொது விவகாரங்கள் மற்றும் தலீபான் புகார்களைக் கேட்கும் இயக்குநரகம் வெளியிட்ட உத்தரவில், பெண்கள் இனி ஆண் வைத்தியர்களைப் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. பெண்கள் தங்களின் நோய்களுக்கு பெண் டாக்டர்களிடம் மட்டுமே சிகிச்சை பெற வேண்டும். மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு ஆஸ்பத்திரியும் இதனை கண்காணிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தை புரட்டிப் போட்ட பனிப்புயல்: 16 பேர் மரணம்



லாஸ் ஏஞ்சல்ஸ்,ஜன.12

அமெரிக்காவில் கடந்த மாதம் வரலாற்றில் இல்லாத அளவுக்கு வெடிகுண்டு புயல் என்று அழைக்கப்படும் சக்தி வாய்ந்த பனிப்புயல் தாக்கியது. இதில் நியூயோர்க், கலிபோர்னியா உள்பட 10க்கும் மேற்பட்ட மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கபட்டன. பனிப்புயல் தொடர்பான சம்பவங்களில் 70 க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

மற்ற மாகாணங்களில் பனிப்புயலின் தாக்கம் குறைந்தபோதிலும், கலிபோர்னியா மாகாணத்தில் தொடர்ந்து பனிப்புயல்கள் தாக்கி வருகின்றன. மேலும் அங்கு வரலாறு காணாத அளவுக்கு கனமழையும் பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள பல்வேறு நகரங்கள் வெள்ளக்காடாகி உள்ளன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கலிபோர்னியா மாகாணத்தை மீண்டும் பயங்கரப் பனிப்புயல் தாக்கியுள்ளது. தொடர்ந்து அங்கு கனமழையும் கொட்டித் தீர்த்தது. இதனால் சான்பிரான்சிஸ்கோ உள்பட பல நகரங்களில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பனிப்புயல் மற்றும் மழை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் சுமார் 2 லட்சம் வீடுகள் இருளில் மூழ்கின. மேலும் பனிப்புயல் தொடர்பான சம்பவங்களில் 16 பேர் பலியாகினர் எனவும், மேலும் பலர் படுகாயம் அடைந்தனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# உகாண்டாவில் எபோலா தொற்று முடிவு சுகாதாரத்துறை அதிகாரபூர்வ அறிவிப்பு

கம்பாலா, ஜன.12

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான உகாண்டாவில் எபோலா நோய்த்தொற்றுப் பரவல் ஏற்பட்டதாக கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அந்நாட்டு அரசு அறிவித்தது. இதுவரை எபோலா தொற்றுப் பாதிப்பால் அங்கு 55 பேர் உயிரிழந்துள்ளனர். உகாண்டாவில் இதற்கு முன் கடந்த 2000 ஆம் ஆண்டில் எபோலா நோய் பரவல் ஏற்பட்ட போது, 200 பேர் உயிரிழந்தனர். அதனை தொடர்ந்து 2012 ஆம் ஆண்டில் எபோலா பரவல் ஏற்பட்டது.

அதன் பிறகு கடந்த ஆண்டு உகாண்டாவில் மீண்டும் எபோலா நோய் பரவல் ஏற்பட்டது. இதனைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக தீவிர நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டு வந்தது. இந்த நிலையில் தற்போது உகாண்டாவில் எபோலா தொற்று முடிவுக்கு வந்ததாக அந்நாட்டின் சுகாதாரத்துறை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இதனை உலக சுகாதார நிறுவனம் உறுதிசெய்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உகாண்டாவில் 142 பேருக்கு எபோலா தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும், இதில் 55 பேர் உயிரிழந்த நிலையில், 87 பேர் குணமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றுப் பரவலுக்கு எதிராக உகாண்டா அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது. உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களின்படி, தொடர்ச்சியாக 42 நாள்கள் புதிய எபோலா தொற்று பாதிப்பு கண்டறியப்படவில்லையெனில், எபோலா பரவல் முடிவுக்கு வந்ததாக எடுத்துக் கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அதிகாரி நாசாவின் முக்கிய பொறுப்பில் நியமனம்



வொஷிங்டன், ஜன.12

அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசாவின் புதிய தலைமை தொழில்நுட்ப வல்லுநராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளித் துறை நிபுணர் ஏசி சரனியா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தலைநகர் வொஷிங்டனில் உள்ள நாசா தலைமையகத்தில் தொழில்நுட்ப கொள்கை மற்றும் திட்டங்களில் நாசாவின் நிர்வாகி பில் நெல்சனின் முதன்மை ஆலோசகராகப் பணியாற்றுவார் என

தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளி பொறியியலில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டம் பெற்றவரான ஏசி சரனியா நாசாவில் இணைவதற்கு முன்பு, சான்றிதழ் பெற்ற தனியார் விண்வெளி நிறுவனமான ரோபோடிக்ஸ் நிறுவனத்தில் தயாரிப்பு மூலோபாயத்தின் துணைத்தலைவராக பணியாற்றியுள்ளார்.

இது தவிர விண்வெளி தொழில்நுட்பம்தொடர்பான பல்வேறு முக்கிய பொறுப்புகளை அவர் வகித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஒன்றரைக் கோடி ரூபா வெளிநாட்டுப் பணத்தைக் கடத்த முயன்றவர் மும்பை விமான நிலையத்தில் மடக்கப்பட்டார்



மும்பை, ஜன.12

மும்பை சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுப் பயணி ஒருவர் அட்டைப்பெட்டியுடன் துபாய் செல்ல வந்திருந்தார். இந்த அட்டை பெட்டியில் பழங்கள் இருப்பதாக கூறியமையால், சந்தேகம் அடைந்த அதிகாரிகள் அட்டை பெட்டியை திறந்து பார்த்த போது பயணி கூறியப்படி பழங்கள் இருந்ததை கண்டனர். இருப்பினும் அட்டை பெட்டியின் பக்கவாட்டு பகுதி பெரிதாக இருப்பதை கண்ட அதிகாரிகள் அதனை பிரித்துப் பார்த்தனர்.

அதில் கத்தை, கத்தையாக வெவ்வேறு நாடுகளை சேர்ந்த பணத்தாள்கள் மறைத்து வைக்கப்பட்டு இருந்ததைக் கண்டுவற்றைப் பறிமுதல் செய்தனர். இந்த பணத்தாள்களின் இந்திய மதிப்பு ரூபா ஒரு கோடியே 50 லட்சம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனை தொடர்ந்து வெளிநாட்டு பணத்தினை கடத்த முயன்ற பயணியைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதுகுறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து பயணியைக் கைது செய்தனர். மேலும் அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஆந்திர பிரதேச குண்டூரைச் சேர்ந்த் மாணவி கூகுள் நிறுவனத்தில் பணியாற்றச் சந்தர்ப்பம்




நியூயோர்க், ஜன.12

ஆந்திர பிரதேசத்தின் குண்டூர் மாவட்டத்தில் வசித்து வரும் ரவூரி பூஜிதா என்ற மாணவி கூகுள் நிறுவனத்தில் பணி செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். அவருக்கு ஆண்டுக்கு ரூ.60 லட்சம் (இந்தியப் பெறுமதியில்) சம்பளம் வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது தந்தை தனியார் வங்கி அதிகாரி எனவும் இவருக்கு 7 ஆம் வகுப்பு படிக்கும் சகோதரி ஒருவர் உள்ளார் என்றும் கூறப்படும் நிலையில், இவரது படிப்புக்கு வழிகாட்ட என்று யாரும் இல்லை என கூறும் இவர், ஒவ்வொரு விசயங்களையும் அவரே தேடி பெற்றிருக்கிறார்.

இதுபற்றி பூஜிதா கூறும்போது, பி.டெக் முதல் ஆண்டு படித்தபோது, நாட்டில் கொரோனா பரவல் ஏற்பட்டது. ஊரடங்கும் அமுலுக்கு வந்தது. பலரை போல என்னாலும் கல்லூரிக்குச் சென்று படிக்க முடியாமல் போனது. ஆனால், நான் கவலைப்படவில்லை ஒன்லைன் வழி கல்வியில் விரிவுரையாளர்கள் கூறும் விடயங்களைக் கூர்ந்து கவனித்தேன். ஆசிரியர்கள், மூத்த மாணவர்களிடம் சந்தேகம் கேட்டு விளக்கங்களைப் பெறுவேன். என்னால் முடியாதபோது, ஒன்லைனில் விடை தேடுவேன் எனக் கூறுகிறார்.

மேலும், குண்டூரில் உள்ள கே.எல். பல்கலைகழகத்தில் பி.டெக் சேர்ந்தேன். அதில் எனது கோடிங் வகுப்புக்கான தொடக்கம் அமைந்தது. ஒன்லைன் வகுப்புகளில் புரியாத விடயங்களை, யூ-டியூப் வீடியோக்களை பார்த்து, கோடிங்கில் தேர்ச்சி அடைந்தேன் என பூஜிதா கூறுகிறார். இதற்காக பல்வேறு தளங்களுக்கு சென்று கோடிங் பயிற்சியை மேற்கொண்டு, மாதிரி தேர்வுகளிலும் பங்கேற்றுள்ளார். பிற திறமைகளையும் வளர்த்து கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து கூகுள், அடோப் மற்றும் அமேசான் நிறுவனங்களில் பணியாற்ற இவருக்கு வாய்ப்புக் கிடைத்து உள்ளது. அதில், கூகுள் வாய்ப்பை அவர் பயன்படுத்தி கொண்டுள்ளார். இதனை தொடர்ந்து, கூகுள் நிறுவனத்தில் பணி அனுபவத்திற்கான பயிற்சியில் அடுத்த வாரம் சேர இருக்கிறார். தொடர்ந்து, அடுத்தடுத்து முயன்று உயர் பதவியை பெறுவேன் என அவர் கூறியுள்ளார்.

## சேது சமுத்திர திட்டத்தை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்றக் கோரி சட்டப்பேரவையில் பிரேரணை

சென்னை, ஜன.12

நடப்பு ஆண்டின் முதல் சட்டசபை கூட்டம் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில், சேது சமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி சட்டப்பேரவையில் இன்று அரசினர் தனிப் பிரேரணையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004 இல் அப்போதைய பிரதமர் மன்மோகன்சிங் இந்தத்திட்டத்தைத்தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தை இனியும் காலம்தாழ்த்தாமல் நிறைவேற்றவேண்டும். அதுதான் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும் என்றும், சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறது என்பதால் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தப் பிரேரணையை சட்டப்பேரவையில் முன்மொழிகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ராமர் பாலம் இடிப்பு, சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு உள்ளிட்ட சர்ச்சைகளால் சேது சமுத்திரம் திட்டம் தொடர்ந்து தாமதாகி வருவது குறிப்பிடத்தக்கது.





## 61 நாள்ளகளில் 50 ஆயிரம் விவசாய பயனாளிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கி தமிழக அரசு சாதனை

தமிழ்நாடு,ஜன.12

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு, தமிழ்நாட்டில் பசுமை புரட்சிக்கு வித்திடும் விதமாக, 2022-2023 ஆம் ஆண்டு எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையில், இந்த நிதியாண்டில் 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, கடந்த 11.11.2022 அன்று கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சரால் 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, அன்றைய தினமே 20ஆயிரம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான ஆணைகளும் வழங்கப்பட்டன.

மேலும், இத்திட்டம் 100 நாள்களுக்குள் முடிக்கப்படும் என்று அன்றைய தினம் விழா மேடையில் அறிவிக்கப்பட்டது. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிவரும் இந்த அரசின் செயல்பாடுகளின் ஒரு முக்கிய பகுதியாக, இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட நாளான 11.11.2022 இல் இருந்து 61 நாள்களிலேயே, அதாவது கடந்த 9ஆம் திகதியன்றே, 50 ஆயிரம் விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கி வரலாறு படைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு - கிழக்கில் மு.கா. தனிவழி மருதமுனையில் ஹக்கீம் அறிவிப்பு






(ஏ.எல்.எம். ஷினாஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு கூட்டம் நேற்று முந்தினம் மாலை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் றவூப் ஹக்கீம் ஹக்கீம் தலைமையில் மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் கட்சியின் தற்போதைய நடவடிக்கைகள் சம்மந்தமாகவும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எவ்வாறு போட்டியிடுவது மற்றும் எதிர் கால கட்சியின் செயற் திட்டங்கள் பற்றியும் கலந்து ரையாடும் நோக்கில் இந்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கட்சியின் தலைவர் ஹக்கீம் இங்கு உரையாற்றும் போது, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வடக்கு, கிழக்கில் தனித்து தனது மரச் சின்னத்தில் போட்டியிடும் என்று தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வரு மாறு:-

வேட்பாளர் தெரிவை பொறுப்பெடுத்து அதை செய்கின்றவர்கள் எனக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள், என்னோடு நல்லுறவாக இருந்துவர்களைத்தான் நான் தெரிவு செய்வேன், 'நீ எனக்கு வேலை செய்யவில்லை', கடந்த ஆண்டு அவர் மாற்று கட்சிகளில் இருந்தவர், அங்கும் - இங்கும் நின்றவர் என்று ஒருவரை ஒருவர் வெட்டி, குத்தி, கழிக்கிற வியங்களில் இல்லாமல் அவருக்கு உண்மையில் செல்வாக்கு இருக்கிறதா?, அவருடைய வட்டாரத்தில் அவருக்கு மக்களின் ஆதரவு இருக்கிறதா?, கட்சியின் நன்மதிப்பை பாதுகாக்க கூடியவரா?, என்று பார்த்து அவருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். வேட்பாளர் பத்திரத்திற்கான கடைசி சம்மதத்தை நான் தராமல் யாரும் போட முடியாது. தெரிவு சரியாக நடந்திருக்கிறதா என்பதை தீர்மானித்து விட்டுத்தான் தலைவர் அதனை வழங்குவார்.

அலிஸாகிர் மௌலானாவிற்குரிய அந்தஸ்து இந்த கட்சியில் எப்பொழுதும் இருக்கும். கட்சியின் வாக்கு பலத்தோடு பலர் கட்சிக்குள்ளே வந்திருக்கிறார்கள் ஆனால் அலிஸாகிர் மௌலானா அவருக்கு இருந்த வாக்கு பலத்தோடு கட்சிக்குள்ளே வந்தவர். இவர் நாடாளுமன்றம் செல்வதை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பொறுப்பெடுக்கின்றார். அவருடைய பெருந்தன்மையை இந்த மேடையிலே நான் பகிரங்க மாக அறிவிக்க விரும்புகின்றேன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்து அதன் மரச் சின்னத்தில் போட்டியிடும். ஐக்கிய மக்கள் சக்தியும் இந்த தேர்தலில் தனித்தே போட்டியிடும் இதன் மூலம் பலத்தையும் கண்டு கொள்ள முடியும். தேர்தல் முடிந்ததற்கு பிறகு கூட்டமைப்பு அமைப்பது தொடர்பில் யோசிப்போம்.

இதற்கு சஜித் பிரேமதாஸவும் உடன்பாட்டை தெரிவித்திருக்கின்றார். ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் கட்சியின் பலத்தை வெளிக்காட்டுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். - என்று தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் களான எச்.எம்.எம் ஹரீஸ்,பைசால் காசிம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம் மன்சூர், அலி சாஹீர் மௌலானா, கட்சியின் தவிசாளர் ஏ.எல். அப்துல் மஜீட், செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத் தரணி எம்.நிசாம் காரியப்பர், கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் இறுதியில் உள்ளூராட்சி மன்ற தேர்த லுக்கான வேட்பாளர் பட்டியலை தயார் செய்வதற்காக குழு பிரதேச ரீதியாக அமைக்கப்பட்டது. இதன்போது சம்மாந்துறை பிரதேசத்தை சேர்ந்த இரு குழுக்களுக்கு இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டதை தொடர்ந்து கட்சி ஆதரவாளர்களுக்கு மத்தியில் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் வாக்குவாதம் கைகலப்பாக மாறி யதையும் காணக்கூடியதாக இருந்தது.

## கந்தளாயில் பங்கஸ் நோயினால் நெற் செய்கை பெரிதும் பாதிப்பு

### விவசாயிகள் பெரும் விசனத்தில்





(எவ்.முபாரக்)

கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் பகு திக்குட்பட்ட கந்தளாய், வான் எல, அக்போகம, முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம், அயிலியடி போன்ற பகுதிகளில் பங்கஸ் நோய்த் தாக்கம் அதி கரித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக் கின்றனர் .

இப்பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலே பங்கஸ் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இரவு,பகலாக விவசாயத்திற்காக பாடுபட்டும் பிரயோசனமற்று காணப்படுவதாகவும் விவசா- யிகள் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு கிருமி நாசினிகள் தெளித்தும் பங்கஸ் நோயைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

கடந்தகாலத்தில் பசளை வகைகளை அதிக விலை கொடுத்து வாங்கி விவசாயத்தை ஆரம்பித்த பின் வெள்ளத்தினால் பாதி க்கப்பட்டனர் எனவும் இம்முறை பங்கஸ் நோய்த் தாக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

நகைகளை அடகு வைத்துக் கடன் பெற்று கிருமி நாசினி வாங்கிப் பயன்படுத்தியும் எந்தவொரு முன்னேற்றமும் இல்லை எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவை தொடர்பாக விவசாய அமைச்சின் அதி காரிகள், பிரதேச செயலக விவசாய உத்தி யோகத்தர்கள் களத்தில் இறங்கி பார்ப்பதில்லை எனவும் விவசாயிகள் சுற்றம் சுமத்துகின்றனர்.

## திருகோணமலைப் பொது நூலகத்தில் கௌரவிப்பும், பரிசளிப்பு நிகழ்ச்சியும்

(ஹஸ்பர்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பும் வைபவமும் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு நகரசபை மண்டபத்தில் நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கூ . பார்த்திபனும், சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் அதிபர் செ.பத்மசீலன், உப்புவெளி சுகாதார வைத்தி ய அதிகாரி வைத்தியர் ச.சயனொளிபவன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக சமூக ஆர்வலர்க. சுப்பிரமணியமும் கலந்து சிறப்பித்தனர். வரவேற்புரையை பொது நூலகத்தின் பிரதம நூலகர் க.வரதகுமார் வழங்கினார். சிறப்புரையை நகரசபையின் உப தலைவர் கே.கோகுல்ராஜ் நிகழ்த்தினார். ஸ்ரீ சக்தி கலாலயா ம ாணவியின் தமிழ் கலாச்சார நடனம் இடம் பெற்றது.

சிறப்பு நிகழ்வாக பட்டிமன்றம், கவிஞர் அ . அச்சுதனின் கவிதை, இஸ்லாமிய கலாச்சார நடனம், சிங்கள கலாச்சார நடனம் என்பன இடம் பெற்றன. கல்வி ,கலை, இலக்கிய, ஆய்வு நிகழ்வுக ளில் சிறப்பித்தவர்களுக்கான கௌரவிப்பும் மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# திருகோணமலையில் ஆசிரியர்கள் போராட்டம்!




இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் திருகோணமலை மாவட்ட ஆசிரியர்களால் நேற்று (புதன்கிழமை) போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கல்வி கூட்டுறவு சங்கத்தின் காரியாலயத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி நிறுவனத்தின் மூலமாக கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்ள பரவலான ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் விண்ணப்பித்த போதிலும் பல மாத காலமாக அதனை வழங்காமல் இழுத்தடிப்பு செய்யப்படுகிறது, ஆசிரியர்களது நலனுக்காக உருவாக்கப்பட்ட மேற்படி சங்கத்தில் ஆசிரியர்களது நலன்களுக்கான எந்த ஒரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாமல் அரசியல் இலாபத்துக்காக மாத்திரமே குறித்த நிறுவனம் தற்போது இயங்கி வருவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

மேலும் நிர்வாக குழுவிற்கான கால எல்லை முடிவடைந்த போதிலும் இன்னமும் புதிய நிர்வாக உறுப்பினர்கள் எவரும் தெரிவு செய்யப்படாமையானது தமக்கு மிகுந்த வருத்தத்தை தெரிவிப்பதாகவும் வெகுவிரைவில் புதிய நிர்வாகக் குழு கூடி அதன் மூலம் ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற நிதி தொடர்பான குறைபாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு சம்பத்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# தனிநபர்களை தடை செய்வது போதாது சர்வதேச நீதிப் பொறிமுறையும் அவசியம்!

## புலம்பெயர் செயற்பாட்டாளர் கோரிக்கை

தனிநபர்களைத் தடை செய்வது மாத்திரம் போதாது குற்றவாளிகளைவிசாரணைக்கு உட்படுத்தும் சர்வதேச பொறிமுறை அவசியம் என இலங்கையின் நீதி மற்றும் நிவாரணத்துக்கான மக்கள் அமைப்பின் ஆலோசகர் மரியோ அருள்தாஸ் தெரிவித்துள்ளார்.

தடை ராஜபக்ஷ சகோதரர்கள் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை குறைத்து மதிப்பிட முடியாது என அவர் குறிப்பிட்டுள் ளார்.

இலங்கை – அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளிடமிருந்து பல வருடங்களாக அழுத்தத்தை எதிர்கொண்டுள்ளது. இலங்கைதான் தொடர்ச்சியாக வழங்கிய வாக்குறுதிகளை நிறை வேற்றத் தவறிவிட்டது எனவும் மரியோ அருள்தாஸ் தெரி வித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு பின்னர் கனடா தடைகளை அறிவித்துள்ளமை தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் இலங்கையை துரத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தனிநபர்களை தடைசெய்வதுமாத்திரம்போதாது குற்றவாளிகளைவிசாரணைக்கு உட்படுத்தும்சர்வதேசபொறிமுறை அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொத்துவில் விஹாரை கலசத்தை விற்பனை செய்ய முயன்ற இருவர் கைது!



பொத்துவில் விஹாரை ஒன்றுக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் கலசம் ஒன்ற 100 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற இருவரை கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் அப்பகுதியில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த நிலையில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட கலசம் விசேட கல்லால் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் பின்புறத்தில் விலைமதிப்பற்ற கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. கலசத்தின் இருபுறமும் வெண்கல புத்தர் சிலை மற்றும் நீலக்கல் பதிக்கப்பட்டுள்ளதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் மட்டக்களப்பு பிரதேசத்தையும் மற்றைய நபர் வெயங்கொட பிரதேசத்தையும் சேர்ந்தவர்களாவர்.

# உடுதும்பர தாக்குதல் சம்பவம்: மேலும் இரண்டு பேர் கைதாகினர்!

கடந்த 8 ஆம் திகதி இரவு உடதும்பர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் போது கூரிய ஆயுதங்களால் நபர் ஒருவர் தாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இரு குழுக்களுக்கிடையில் மோதல் ஒன்று இடம்பெற்றிருந்தது. இதன்போது ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டிருந்தார். மேலும் நால்வர் காயமடைந்திருந்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் உடதும்பர பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் உடதும்பர பிரதேசத்தில்வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 29 மற்றும் 35 வயதுடைய கண்டி நவனதகலை பிரதேசத்தை சேர்ந்தவர்கள்.



மேலும் ஏற்கனவே இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் ஜனவரி 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தெல்தெனிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் இருவரும் தெல்தெனிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்கள்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உடுதும்பர பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# உலக ஹிந்தி மொழி தின நிகழ்வு யாழில்!





உலக ஹிந்தி மொழி தின நிகழ்வுகள் யாழில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது ஹிந்தி மொழிக் கற்கையைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

மேலும் ஹிந்தி மொழி சார்ந்த கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. யாழ். இந்தியத் துணைத் தூதுவர் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தூதரக அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## தேர்தலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடரும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கூறியுள்ளார்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பிலேயே சமன் ஸ்ரீ ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தைப் பெறவேண்டாம் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரை தொடர்பாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் ஹபுஹின்னவிடம் தேர்தல்கள் ஆணைக்குழு விளக்கம் கோரவுள்ளது.

அரசமைப்பின்படி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு இத்தகைய பணிப்புரை விடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவைத் தவிர வேறு எவருக்கும் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தச் சந்திப்பில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை வெற்றிகரமாக நடத்துவதற்கு, சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

வாக்குப் பதிவின் போது வன்முறையில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

## 'ஓட்டோ'......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்சி போட் டியிடும். மக்களும் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'ஓட்டோ' சின்னத்திலேயே ஐக்கிய சோசலிசக் கட்சி களமிறங்கவுள்ளது.

## மக்களின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாதி, மதம், குலம் மற்றும் கட்சி வேறுபாடின்றி அரசமைப்புச் சட்டம் உறுதி செய்த அடிப்படை உரிமையான வாக்குரிமை கூட தற்போதைய அமைச்சரவையால் தடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான கட்டுப்பணம் ஏற்றுக் கொள்வதை இடைநிறுத்த அமைச்சரவை சட்டவிரோதமாகத் தீர்மானித்துள்ளது.

தற்போதைய நிறைவேற்று அதிகாரமும் அமைச்சரவையும் ஒன்றிணைந்து மக்களின் அடிப்படை உரிமைகளை காலில் போட்டு மிதிக்கின்றது.

இதனால், சமூகத்தில் எழுந்த சர்ச்சையால், அந்த முடிவை மாற்றிக் கொள்ள நேரிட்டாலும், இந்தத் தவறுக்காக அமைச்சரவை நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

நாம் இவ்வாறான விபரீதமான செயற்பாடுகளை மேற்கொள்ளாது, புதிய தொழிநுட்பத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

இந்நாட்டின் ஆட்சியாளர்கள், ஆட்சியாளர்களை வணங்கும் அடிமைக் கூட்டத்தையே இதுவரை உருவாக்க விரும்பினாலும், பிரபஞ்சம் திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம், படித்த தலைமுறை, ஸ்மார்ட் இளைஞர்கள் மற்றும் சிறந்த ஆளுமை கொண்ட குடிமக்கள் தலைமுறையை உருவாக்குவதே தற்போதைய எதிர்க்கட்சியின் நோக்கமாக இருக்கின்றது.

நாட்டையே தீக்கிரையாக்கும் தலைமுறையை உருவாக்க வேண்டிய அவசியமில்லை. தற்போதைய சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு டொலர்கள் தேவை. அந்த டொலர்களைக்கொண்டுவரக்கூடியவர்களுக்கு அதிகாரத்தை வழங்குவது மக்களின் பொறுப்பு. இல்லை, முடியாது என்ற கருத்தின் அடிப்படையில் ஒரு நாட்டின் பிரச்சினைகள் ஒருபோதும் தீர்க்கப்படாது.

மக்கள் கோரும் தீர்வை வழங்கும் திறன் நான் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியிடம் இருக்கின்றது.

யார் விமர்சித்தாலும், யார் சேறு பூசினாலும் இந்தப் பிரபஞ்சம் திட்டத்தை நிறுத்த முடியாது. 250 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இதுவரை பஸ்களைக் கோரியுள்ளன. இந்த இலக்கு கடினமாக இருந்தாலும் எப்படியாவது எட்டுவோம் –என்றார்.

## விபத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனது ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சைக்கிளில் இவர் சென்றபோது, மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

திருநெல்வேலியில் உள்ள மக்கள் வங்கிக்குச் செல்வதற்காக வீதியின் இடது புறத்தில் இருந்து வீதியின் நடுக்கோட்டை கடந்து மறுபுறத்துக்குச் சென்றபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் இவரை மோதி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

விபத்தில் மயக்கமடைந்த இவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

## வடக்கை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேட்புமனுத் தாக்கல் அல்லது கட்டுப்பணம் செலுத்துவதற்காக பிள்ளையான் யாழ்ப்பாணத்துக்கு வருவார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனது கட்சியும் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கிலுள்ள சில சபைகளில் போட்டியிடவுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.01.2023 இல் வெளியிடப்பெற்றது.